**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.176/2017**

**இ.ம.எண்.6/2025**

மணிவேலன் **...மனுதாரர்/பிரதிவாதி**

**/எதிர்/**

வேம்பு **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 05.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8, விதி 1A(3) உடனிணைந்த பிரிவு 151ன் மனுதாரர்/பிரதிவாதியால் மனுவில் கண்ட ஆவணத்தை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். மேற்படி வழக்கு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆதரவு மனுதாரரின் வழக்கிற்கு மிகவும் முக்கியமானது ஆகும். அதனைத் தேடிப் பார்த்ததில் தற்போதுதான் கிடைத்தது. எனவே, மனுவில் கண்ட ஆதரவை உரிய காலத்தில் மனுதாரரால் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி ஆதரவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மனுவில் கண்ட ஆவணத்தை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமும், அவசியமானதாக இருக்கிறது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட நேரிடும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரை ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

**3)** இம்மனு சட்டப்படிக்கும், நியாயபடிக்கும் நிலைநிற்கதக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் நேரிடையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் குறிப்பிட்டு மறுக்கிறார். அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண்.3ல் மனுதாரர் மேற்படி அசல் வழக்கானத மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மனுவில் கண்ட ஆவணம் தற்போதுதான் கிடைத்ததாக சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் இந்த எதிர்மனுதாரரால் குறிப்பிட்டு மறுக்கப்படுகிறது. மேற்படி காரணங்கள் பொய்யானவையாகும். எவ்வித தகுந்த காரணங்கள்

இல்லாமலும், மனுவில் கண்ட ஆவணத்தை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்சமயம் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டி போடப்பட்டுள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். எனவே, இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**4)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**5)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**6)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கானது வாதி/எதிர்மனுதாரரால் பிரதிவாதி/மனுதாரருக்கு எதிராக, தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும், மேற்படி வழக்கானது வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில், இம்மனுவானது பிரதிவாதி/மனுதாரரால் மனுவில் கண்ட ஆவணத்தை பிரதிவாதி தரப்பில்

மேற்படி அசல் வழக்கில் கூடுதல் ஆவணமாக குறியீடு செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட ஆவணமானது மேற்படி அசல் வழக்கில் மனுதாரரின் வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணம் என்றும், மேற்படி ஆவணமானது தற்போதுதான் தேடிப் பார்த்ததில் கிடைத்தது என்றும், எனவே, உரிய காலத்தில் மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், வேண்டுமென்றே உரிய காலத்தில் மனுதாரர் மனுவில் கண்ட ஆவணத்தை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்கக் கோரி கூறப்பட்டுள்ளது. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காரணங்களையும் மறுத்தும், அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுவில் கண்ட ஆவணத்தை மனுதாரர் உரிய காலத்தில் தாக்கல் செய்யாதற்கு மனுதாரரால் கூறியுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளும்படி இல்லை என்றும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

8) இரு தரப்பில் எடுத்துரைத்த வாதுரையையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தில் பிரதிவாதி வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்து வருவதாகவும் கூறி மேற்படி அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இந்நிலையில், மேற்படி வழக்கானது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1ன் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுவில் கண்ட ஆவணமான பிரதிவாதியின் பள்ளியாகிய மௌண்ட் க்ரீஸ்

மெட்ரிக் மேல்நிலை பள்ளி, அய்யர்மலை என்ற பள்ளியின் அங்கீகாரத்தை புதுப்பிக்கும் பொருட்டு பள்ளியின் தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம் 2018 மற்றும் அதன் விதிகளின் படி, மேற்படி அங்கீகாரமானது புதுப்பிக்கப்பட்டதற்கான ஆவணம் என்று பரிசீலனை செய்ததின் அடிப்படையில் தெரிகிறது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், பிரதிவாதியின் பள்ளியால் கிரையம் பெறப்பட்ட சொத்தில் மேற்படி பள்ளிக்கூடமானது முறையாக கட்டப்பட்டு முறையாக அனுமதி மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டு இயங்கி வருவதாகவும் கூறி கட்சி செய்துள்ள நிலையில், அதனை நிரூபிக்கும் பொருட்டு மனுவில் கண்ட ஆவணமானது தாக்கல் செய்துள்ளதாக தெரிகிறது.

**9)** இந்நிலையில், மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்தைத் தேடிப் பார்த்ததில் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், உரிய காலத்தில் மனுதாரர் அதை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களை பொறுத்து தீர்வு காண்பதற்கு, இரு தரப்பினர்களுக்கும் வாய்மொழி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் நிரூபணம் செய்ய தகுந்த வாய்ப்புகள் வழங்கிய பின்னிட்டு வழக்கு விசாரணை முடிந்த பிறகே இந்நீதிமன்றத்தால் மேற்படி எழுவினாக்களுக்கு தீர்வு கண்டு இரு தரப்பினர்களுக்கும் நீதி பரிபாலனம் வழங்கமுடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் எதிர்மனுதாரரை விட மனுதாருக்கே அதிகமான இழப்பு ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மனுவில் கண்ட ஆவணத்தைப் பொறுத்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும், மேற்கண்ட ஆவணத்தைப் பொறுத்து ஆட்சேபனை செய்யவும், எதிர்மனுதாரருக்கு மேற்படி

வழக்கில் அனைத்து வகையான வாய்ப்புகளும் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.12 14:14:33 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.12 14:14:39 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**